## சுகம் மருத்துவமனை ஓர் அறிமுகம்

மதுரையைத் தலைமையிடமாகக்கொண்டு செயல்படும் தானம் அறக்கட்டளை மூலம் வறுமையில் வாடும் ஏழைப்பெண்கள் மற்றும் விவசாயிகளின் துயர் துடைக்க உருவாக்கப்பட்ட களஞ்சியம் மற்றும் வயலகத்திட்டங்கள் மக்கள் இயக்கங்களாக அளப்பரிய பரிணாம வளர்ச்சியடைந்துள்ளன. 1989ல் தொடங்கப்பட்ட இந்த அமைப்புகள் தற்போது 12 மாநிலங்களில் சுமார் 10.3 இலட்சம் ஏழைக்குடும்பங்களுடன் ஆலமரம் போல் கிளை பரப்பி நிற்கின்றன.

தேனி மாவட்டத்தில் தேனி,கடமலைகுண்டு,போடி,பெரியகுளம்,ஆண்டிபட்டி,உத்தமபாளையம் மற்றும் சின்னமனூர் வட்டாரங்களில் களஞ்சியத்திட்டம் மூலம் 15,000 ஏழைக்குடும்பங்களையும் வயலகத்திட்டம் மூலம் 4,000 விவசாயக்குடும்பங்களையும் சென்றடைந்துள்ளன. களஞ்சியம் மூலம் பொருளாதார மேம்பாட்டையும் வயலகம் மூலம் வாழ்வின் உயிர்நாடியான நீராதார மேம்பாட்டையும் உருவாக்கிய இந்த அமைப்புகள், தற்போது மக்களின் வாழ்வாதாரத் தேவையான உடல்நலத்தை மேம்படுத்த இந்த “சுகம் சிறப்பு மருத்துவமனையை” உருவாக்கியுள்ளன.

பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்டம் மூலம் மேற்கண்ட வட்டாரங்களில் எதிர்கால சமுதாயத்தின் தூண்களான குழந்தைகள், அவர்களை உருவாக்கும் பெண்களின் நலனில் கவனம் செலுத்தி கடந்த மூன்று ஆண்டுகளாக பணியாற்றி வருகின்றன. மேலும் “திசைகள்” திட்டத்தின் மூலம் அணுகுவதற்குக்கடினமான தொலைதூர கிராமங்களில் நோய்கண்டறிதல் மற்றும் மருத்துவ சேவையும் செய்து வந்திருக்கின்றன. இந்த அனுபவங்களின் அடிப்படையில் குறைவான கட்டணம், முறையான மருத்துவ ஆலோசனை இவற்றின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் இம்மருத்துவமனை தொடங்கப்படுகிறது.

இம்மருத்துவமனை தனது நேரடியான சேவையை வழங்குவதுடன் அரசு மருத்துவமனை மற்றும் பிற தனியார் மருத்துவமனைகளில் கிடைக்கும் மிகச்சிறந்த சேவைகளையும் ஒருங்கிணைத்து வழங்கச்செய்வதன் மூலம் ஏழைமக்களுக்கு அனைத்து வித தரமான மருத்துவ சேவை கிடைக்கச்செய்வதை தனது இலட்சியமாகக்கொண்டு கடந்த 2007ல் துவங்கபட்டு கடந்த 4 வருடங்களாக மருத்துவ சேவையை செய்துவருகின்றது.

இந்த உன்னதமான மருத்துவ பணியின் வெளிப்பாடாக இன்று திறக்கப்படவுள்ள இப்புதிய மருத்துவமனை கட்டிடம் உள்ளது. இம்மருத்துவமனை சொந்த கட்டிடமாக உருவாக உறுதுணையாக இருந்த ‘‘யுரேகாஅஃமியா’’ அறக்கட்டளையினா், மருத்துவர்கள், மருந்தகங்கள், மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் இத்தருணத்தில் தானம் சுகம் அறக்கட்டளை நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து கொள்கிறது.

# சுகம் சிறப்பு மருத்துவமனை
# திறப்பு விழா அழைப்பிதழ்

நாள் : 2 - 8 - 2012, வியாழக்கிழமை

இடம் :
247/2, கான்வெண்ட் எதிபுறம்,
மிராண்டா லையன், பெரியகுளம் ரோடு, தேனி.



## நிகழ்ச்சி நிரல்

காலை 8.50 இறைவணக்கம்.

களஞ்சிய பாவலர். திரு. இரா.வேங்கையன்
தானம் அறக்கட்டளை, மதுரை.

9.05 வரவேற்புரை.

திருமதி. இ.அம்பிகா,
மண்டல ஒருங்கிணைப்பாளர்,தேனி.

9.15 குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்குதல்.

9.30 சுகம் அறக்கட்டளை — ஓர் அறிமுகம்

திரு. இரா. இராஜபாண்டியன்,
முதன்மை நிர்வாகி, சுகம் அறக்கட்டளை

9.40 சுகம் சிறப்பு மருத்துவமனை இயக்குநர்கள்
மற்றும் பணியாளர்கள் அறிமுகம்.

9.55 அனுபவப்பகிர்வு – மருத்துவமனை பயனாளிகள்

10.10 சுகம் சிறப்பு மருத்துவமனை கட்டிடத்தை துவக்கி வைத்து சிறப்புரை

உயர்திரு. மரு. கே.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப
மாவட்ட ஆட்சியர், தேனி.

10.40 வாழ்த்துரை

திரு. மா.ப.வாசிமலை,

நிர்வாக இயக்குநர், தானம் அறக்கட்டளை, மதுரை.

திரு. பி.டி. பங்கேரா

மேலாண்மை இயக்குநர், ஹைடெக் அராய் (பி) லிட்.

மரு. பி.சின்னப்பா,

இணை இயக்குநர், மாவட்ட சுகாதார பணிகள்,
பெரியகுளம்.

மரு. காஞ்சனா,

துணை இயக்குநர், மாவட்ட சுகாதார பணிகள், தேனி.

திரு. கே.லட்சுமிபதிகுமார்,

துணை பொதுமேலாளர், கனரா வங்கி மதுரை சரகம்.

திரு. வி.பொன்னுசாமி,
கோட்ட மேலாளர், நேசனல் இன்சூரன்ஸ் கம்பெனி, மதுரை.

திரு. எ.மீனாட்சிசுந்தரம்,
முதுநிலை மேலாளர் (பி&ஜி.எஸ்)
இந்திய ஆயுள்காப்பீட்டுக்கழகம், மதுரை.

திருமதி. வி.கே.பத்மாவதி,

முதன்மை நிர்வாகி களஞ்சிய அறக்கட்டளை மதுரை.

திருமதி. பி. சிவராணி,

தலைவர், சுகம் அறக்கட்டளை.

ஸ்ரீ சக்தி புரஸ்கார் திருமதி. பி.சின்னப்பிள்ளை,

தலைவி, களஞ்சிய இயக்கம், மதுரை.

11.30 நன்றியுரை

திரு. கே.பிரபு,

வாழ்வாதார ஒருங்கிணைப்பாளர்.தேனி.

உறுதிமொழி.

நாட்டுப்பண்.